செ.கு.எண் 104 நாள் 12-12-2009

# முதலமைச்சர் கலைஞர் அறிக்கை – 12.12.2009

தமிழகத்திலே உள்ள அனைத்துக் கிராமங்களிலும் தனது கட்சிக்காரர்களை விட்டு போராட்டங்கள் – ஆர்ப்பாட்டங்களை நடத்தி முடித்து விட்ட எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா – வரும் 18ஆம் தேதி டெல்லியிலே கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக அறிக்கை விடுத் துள்ளார். மத்திய அரசால் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட இருக்கும் மீனவர்களுக்கு விரோதமான கடல் மீன் தொழில் (ஒழுங்கு முறை மற்றும் மேலாண்மை) வரைவு சட்ட முன் வடிவை எதிர்த்து இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தப் போகிறாராம்.

மீனவர்களுக்கு விரோதமாக இப்படியொரு மசோதாவை மத்திய அரசு கொண்டு வரப் போவது தெரிந்த உடனேயே நவம்பர் 19ஆம் தேதி யன்றே தமிழக அரசின் சார்பில் மத்திய அமைச்சர் சரத் பவார் அவர்களுக்கு விரிவான கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறேன். அந்தக் கடிதத்தில் கடர்சார் மீன்வளம் (முறைப்படுத்தல் மற்றும் நிர்வாகம்) நகல் சட்டம் 2009 குறித்து தமிழக மீனவர்களின் ஐயப்பாடுகளையும், அச்சத் தையும் மத்திய வேளாண்துறை நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் சரத் பவார் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்ததோடு, இந்தப் பிரச்சினைகள் குறித்து மீன் பிடி தொழிலிலே தொடர்புடையவர்களோடு விரிவாகக் கலந்து பேசிய பிறகு தான் அனைத்தையும் உள்ளடக்கிய முற்போக்கான சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தேன்.

ஜெயலலிதா அறிக்கையிலே நான் கடிதம் எழுதியோடு என்னுடைய எதிர்ப்பு நாடகத்தை முடித்துக் கொண்டேன் என்று அவருக்கே உரிய பாணியில் எழுதியிருக்கிறார். அதுவும் தவறான செய்தி. கடிதத்தை எழுதியதோடு நான் நின்று விடவில்லை. மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் அவர்களை தொடர்பு கொண்டு, உடனடியாக மத்திய அமைச்சர் சரத் பவார் அவர்களைச் சந்தித்து மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து

விரிவாக பேசுமாறு பணித்தேன். மத்திய அமைச்சர் தயாநிதி மாறனும் உடனடியாக டிசம்பர் 10ஆம் தேதியன்று மத்திய அமைச்சர் சரத் பவார் அவர்களைச் சந்தித்து மீனவர்களின் நிலைமைகளை விளக்கியிருக்கிறார். கொண்டு வர உத்தேசித்த மசோதாவின் காரணமாக மீனவர்களுக்கு என்னென்ன பிரச்சினைகள் ஏற்படும் என்பதையும் விரிவாக மத்திய அமைச்சரிடம் சொல்லியிருக்கிறார். இப்பிரச்சினை குறித்து சரத் பவார் அவர்களுக்கு நான் எழுதிய கடிதம் பற்றியும் எடுத்துச் சொல்லியிருக்கிறார். அத்தனையையும் கேட்டு விட்டு, மத்திய அமைச்சர் தமிழக மத்திய அமைச்சர் தயாநிதி மாறனிடம், "தமிழக முதல் அமைச்சரின் கோரிக்கைபடி, கடல் மீன் பிடி ஒழுங்குமுறை மசோதாவை நடப்பு பாராளுமன்ற கூட்டத்தில் தாக்கல் செய்ய மாட்டோம். இந்த மசோதா பற்றி அனைத்து முதல்வர்கள் மற்றும் மீனவப் பிரதிநிதிகளின் கருத்து கேட்கப்படும்" என்று உறுதியளித்திருக்கிறார். இந்தச் செய்தி 11ஆம் தேதிய அனைத்து ஏடுகளிலும் பெரிதாக வெளி வந்துள்ளது. இத்தனை செய்திகளையும் தெரிந்து கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா இது மீனவர்களை ஏமாற்றும் செயல் என்றும், இதற்காக டெல்லியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாகவும் அறிவிக்கின்றார் என்றால் உண்மையில் மீனவர்களை ஏமாற்றுகின்ற செயல் எது, ஏமாற்றுகின்றவர் யார் என்பதையும் அனைவரும் புரிந்து கொள்ளலாம். நவம்பர் மாதம் மசோதா வரப் போகிறது என்று தெரிந்ததும் நவம்பர் 19ஆம்தேதியன்றே நான் மத்திய அமைச்சருக்கு கடிதம் எழுதிவிட்டேன். ஆனால் ஜெயலலிதா இந்த ஒரு மாத காலமும் சும்மாயிருந்து விட்டு, தற்போது திருச்செந்தூர் இடைத் தேர்தல் என்றதும், அங்கேயுள்ள மீனவர்களை ஏமாற்றி அவர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக டெல்லியிலே ஆர்ப்பாட்டம் என்று அறிக்கை விடுகிறார். ஆனால் மீனவப் பெருமக்களுக்கு இந்த உண்மைகள் எல்லாம் தெரியும்.

---



வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9